

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (02.03.2025) திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் மணி மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே. சரவணன், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரசியல் செய்ய அண்ணாமலை இருக்கிறார்! ஆளுநர் போட்டியிட வேண்டாம்!

# கச்சத்தீவு பற்றிய 'கப்ஸா' கதைகளைப் பேசுவதை நிறுத்துங்கள் ஆளுநரே!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, மார்ச் 4-

அரசியல் செய்ய அண்ணாமலை இருக்கிறார். ஆளுநர் போட்டியிட வேண்டாம் என ஆளுநருக்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பதில் அளித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கச்சத் தீவை வைத்து கச்சைக் கட்ட முயல்கிறார் ஆளுநர் ரவி. 'கச்சத்தீவில் நம் மீனவர்களின் உரிமையைப் பறித்ததற்கு அப்போதைய மத்திய, மாநில அரசுகளே காரணம். 1974 தவறுக்கு அப்போது மத்தியில் கூட்டணியில் இருந்த இன்றைய மாநில ஆளுங்கட்சிக்கும் பொறுப்பு' எனத் துருப்பிடித்த ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார் ஆளுநர் ரவி.

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டு சிறை பிடிக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 2024-ஆம் ஆண்டில் 528 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தாண்டு ஜனவரியில் மட்டும் 53 மீனவர்கள் கைதானார்கள். முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாக வலியுறுத்தியும் , திமுக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் செய்தும் தமிழ்நாடு மீனவர்களை மீட்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் தடுக்கத் தவறிய ஒன்றிய பாஜக அரசின் இயலாமையை மறைக்க ஆளுநர் ரவி தமிழ்நாடு அரசு மீது வீண் அவதூறு பரப்பி வருகிறார்.

கச்சத்தீவு தொடர்பாகக் கழகத்தின் மீது வீண் அவதூறு பரப்பும் விஷமிகளுக்குக் கழக மூத்த முன்னோடிகளும், முதலமைச்சர் அவர்களும் பலமுறை விளக்கம் கொடுத்துவிட்டனர். இருந்தாலும் எத்தனை விளக்கம் கூறினாலும் விளங்காத ஆளுநர் ரவிக்கு மீண்டும் சொல்கிறேன். கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதற்கான ஆதாரத்தைக் கொடுத்ததே அப்போதைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான தலைவர் கலைஞர்தான். அதோடு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்து அவையை விட்டு வெளியேறியது திமுக. அதுமட்டுமல்லாது கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி அப்போதைய திமுக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் நிறை வேற்றியது. இந்த வரலாற்று உண்மைகள் எல்லாம் வரலாற்றைப் படிப்பவர்களுக்குத் தெரியும் ஆனால் வாட்ஸ் அப் யுனிவர்சிட்டியில் வரும் வதந்திகளை வரலாறாக நினைத்துப் படிக்கும் ஆளுநர் ரவிக்கு இதெல்லாம் தெரியாது தான்.

கடந்த ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் கச்சத்தீவு பற்றி ஒரு ஆர்.டி.ஐ. ஆவணம்



வெளியாகி உள்ளதாகச் சொல்லி புரளியைக் கிளப்பி குறளி வித்தை காட்டினார் அண்ணாமலை. அதனைப் பிரதமர் மோடி முதல் வெளியுறவுத் துறை அமைச்சர் வரை உண்மையாக்க முயன்றார்கள். கச்சத்தீவு பற்றிக் கடந்த 10 ஆண்டுகளாகப் பேசாத மோடி, திடீர் புரட்சியாளராக மாறி தேர்தல் பிரசாரத்தில் பேசினார். ஆனாலும் 40 தொகுதிகளிலும் பாஜக கூட்டணி தோற்றுப் போனது.

புஸ்வாணம் ஆன விவகாரத்தை இப்போது ஆளுநர் ரவி தூக்கிக் கொண்டு வந்து கலர் மத்தாப்பு காட்ட முயல்கிறார். தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாடு மட்டுமல்லாது தென்னிந்தியா முழுமையும் வஞ்சிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய விவகாரம் இந்தியா முழுமைக்கும் பேசு பொருளாகியிருக்கிறது. தெலங்கானா, கர்நாடக மாநிலங்கள் எதிர்ப்புக் குரல் எழுப்ப ஆரம்பித்திருக்கின்றன. எங்கே இந்தியா முழுமைக்கும் அது எதிரொலித்துவிடப் போகிறது என்ற அச்சத்தில் அதனைத் திசை திருப்ப ஒன்றிய அரசின் அஜெண்டாவை நிறைவேற்றக் கச்சத் தீவைக் கையில் எடுத்திருக்கிறார் ஆளுநர் ரவி.

1974ல் போன கச்சத் தீவைப் பற்றி கவலைப்பட்ட பிரதமர் மோடி அவர் கண் முன்னே இந்தியாவின் 2000 சதுர கி.மீ பகுதிகள் சீனா ஆக்கிரமித்த போது அமைதியாக இருந்தார். கடந்த மக்களவைத் தேர்தலில், 'அறிவியல் பூர்வமாகவும், சட்டப்படியும் அணுகி கச்சத்தீவைக் கண்டிப்பாக மோடி அரசு மீட்கும்" என்று சொன்னவர்கள் எங்கே போனார்கள்? தேர்தல் வரும் போதெல்லாம் கச்சத் தீவு கேடயத்தைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள், இப்போது தொகுதி மறுசீரமைப்பில் பாஜகவின் சதித் திட்டம் அம்பலத்திற்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகக் கச்சத் தீவை மீண்டும் கிளப்புகிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் கொடுத்த அடி ஆளுநருக்கு நினைவு இருக்கிறதா? அப்படியான பதிலடியைத் தொகுதி மறுசீரமைப்பிலும் கிடைக்கும்.

கச்சத் தீவு பற்றிய கப்ஸா கதைகளை பேசுவதை நிறுத்துங்கள் ஆளுநரே! இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட நமது மீனவர்களை விடுதலை செய்ய உங்கள் எஜமானர் மோடியிடம் கோரிக்கை வையுங்கள். அரசியல் செய்ய அண்ணாமலை இருக்கிறார். ஆளுநர் அவரோடு போட்டியிட வேண்டாம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்,விவசாயிகள் பயன்பெறும் வகையில்

# சமயபுரத்தில் நாளை தொழில் முனைவோருக்கான முகாம்!

## பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு தகவல்!

திருச்சி, மார்ச் 4 -

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கு ( தொழில் முனைவோருக்காக) பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே . என். அருண் நேரு அழைப்பு விடுத்துள்ளார்.

சமயபுரத்தில் நாளை (5ந் தேதி) தொழில் முனைவோருக்கான முகாம் நடைபெறுகிறது.

பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின் படியும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் படியும் , கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என். நேரு வழிகாட்டுதலோடு திருச்சி மாவட்டத்தில் மண்ணச்சநல்லூர், முசிறி, லால்குடி, துறையூர், , மற்றும் பெரம்பலூர், குளித்தலை ஆகிய பகுதிகளில் உள்ள ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மற்றும் ,சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனம் வளர்ச்சிக்காக மாபெரும் முகாம் நாளை (5ந்தேதி - புதன் கிழமை) காலை 10 மணியளவில் சமயபுரத்தில் உள்ள ரெட்டியார் மஹாலில் நடைபெற உள்ளது



வாழை ஆராய்ச்சி நிறுவனம், தொழில் குழுமங்கள், வங்கியாளர்கள் சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ,துறை அலுவலர்கள், தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைகள் மற்றும் திட்டங்களை விளக்கி கூற உள்ளனர் .

தொழில் முனைவோருக்கான அனைத்து விதமான சந்தேகங்கள், மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள், வணிகம் செய்ய வேண்டிய முறை, வங்கிக்கடன் பெற தேவையான ஆவணங்கள், அரசு வழங்கும் சலுகைகள், மானியங்கள் உட்பட அனைத்து சந்தேகங்களுக்கும் முறையான தீர்வுகள் வழங்கப்பட்டு தொழிலில் வெற்றி பெற வழிகாட்டப்படும்.

இது மட்டுமன்றி, பல்வேறு அரசுத் துறைகள் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை காட்சிப்படுத்த உள்ளனர் .

வெற்றி பெற்ற தொழில் முனைவோர்கள் தங்களது அனுபவங்களை எடுத்துக் கூறி தேவையான வழி காட்டுதல்களை

கூற இருப்பதால் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், சிறு குறு மட்டும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் , தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கான மாபெரும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு கேட்டுக் கொண்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்ப்பந்திக்கும் பா.ஜ.க அரசைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறந்தாங்கி தபால் நிலையம் அருகில் புதுக்கோட்டை திமுக தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ. கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் அறந்தாங்கி தி.மு.க. நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், சி.ராமநாதன், பூமிநாதன், பொன்.கணேசன், சக்தி ராமசாமி, கே.பி.கே.டி. தங்கமணி, அழகு சிதம்பரம், அ.முத்து, அரு.வடிவேலு, கே.சி.சிவக்குமார், கணேசன், பழனிக்குமார், த.மணி ராஜன், நசுருதீன், இரா.தமிழ்ராசா, செந்தில்வேலன், பழனி குமார், குமரேசன், சக்திவேல், பழனி தேவா, அப்துல் நாசர், பாத்திமா பீவி, மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் வீராச்சாமி, நிலையூர் சரவணன், மோகன், கருணாகரன், லோகநாதன், முபாரக் உட்பட பல்வேறு மாணவ அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறைவாக ராஜ பெரியண்ணன் நன்றி தெரிவித்தார்.



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 01 அன்று புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தங்க மோதிரத்தை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அணிவித்தார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் எம். எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, அரு. வீரமணி, பி.ராஜேஸ்வரி, சுப.சரவணன், சு.சண்முகம், செ.அசோக் பாண்டியன், எம். லியாகத் அலி, என். சாத்தையா, மு.க.ராமகிருஷ்ணன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், ஆர்.ஆர்.சாமிநாதன், அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வே. ராஜேஸ், வி. என்.எம்.பாலு, சி.அரங்கநாயகம், கவிவேந்தன், இராம.செல்வராஜ், மா.மணிவேல், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், வெற்றிச்செல்வன், செ.கணேஷ், க.செ.மணிமாறன், எல்.ஐ.சி ரமேஷ், எழில் ராஜா, ஐ.எம். பால்ராஜ், ராமச்சந்திரன், மாலையீடு பிரபு, இளங்கோ, தனபால், மாநில மாவட்ட மாநகர ஒன்றிய வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தமிழக முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு – பொன்னமராவதியில்

# அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அணிவித்தார்!

புதுக்கோட்டை, மார்ச் 4 -

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளில் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி,பொன்னமராவதி தி.மு.க. கட்சி அலுவலகத்தில் கழக கொடியேற்றி கேக் வெட்டி பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து பேருந்து நிலையம் முன்பு கட்சிக்கொடி ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

வலையபட்டி அரசு பாப்பாயி ஆச்சி தாலுகா மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தங்க மோதிரத்தை அணிவித்தார். அடைக்கன்குளம் ஊரணி கரையில் மரக்கன்றுகள் நட்டனர்.

இந்நிகழ்வில் பொன்னமராவதி திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் அ.அடைக்கலமணி, பேரூர் செயலாளர் அ.அழகப்பன், பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், பேரூராட்சி துணைத் தலைவர் வெங்கடேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ். ஜெயராமன், மாவட்ட விளையாட்டு பிரிவு நிர்வாகி ஆலவயல் சுவாமிநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வேந்தன் பட்டி இளையராஜா, முன்னாள் நகரச் செயலாளர் கோவை ராமன், பேரூராட்சி கவுன்சிலர்கள் ராஜா, ராமநாதன், பேரூர் கழக அவைத்தலைவர் தட்சிணாமூர்த்தி, மணப்பட்டி முன்னாள் தலைவர் பழனிச்சாமி, ஆலவயல் மிராசு அழகப்பன், ஒன்றிய கவுன்சிலர் மணி பொறியாளர் அணி பாலக்குறிச்சி சரவணன் மேலும் கட்சி நிர்வாகிகள் ராணி, ஆதிமுத்து, லக்ஷ்மணன், இம்ரான், தீபக், அஜித்,ஜித்தன், செந்தில்,சத்யா, சண்முகம், கதிர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி சீரமைப்பு!

# தமிழ்நாட்டிற்கு மிகப் பெரும் பாதிப்பு ஏற்படும்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேட்டி!

நாமக்கல், மார்ச் 4 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க., செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவரது இல்லத்தில் செய்தியாளர்களிடம் சந்தித்து பேசுகையில். தி.மு.க., தலைமையிலான ஆட்சி தமிழகத்திற்கு பொற்காலமாக இருந்தது. கல்வி, பொருளாதாரம், விவசாயம், தொழில் ஆகியவை வளர்ந்தன. அனைத்து சமுதாய மக்களும் வளர்வதற்காக உள் ஒதுக்கீடு முறையை முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அமல் படுத்தினார்.

கொங்கு மக்களை பிற்பட்ட வகுப்பிற்கும் தாழ்த்தப்பட்ட மக்களில் அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடும் வழங்கி அந்த சமுதாய மக்களை உயர்வடைய செய்தார். தற்போதைய பா.ஜ., தலைமையிலான ஒன்றிய அரசு ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்பதை திணித்து வருகிறது.இதனால் பல்வேறு கலாச்சாரங்கள் அழிந்து விடும்.

1971 ஆம் ஆண்டு குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்த போது அந்த திட்டத்தை சிறப்பாக தமிழ்நாடு செயல்படுத்தியது. தமிழ்நாடு மட்டுமின்றி தென்னிந்திய மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் செயல்படுத்தி மக்கள் தொகையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன.

இதனால், 1976ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை வரையறை செய்தபோது, இன்னும், 25 ஆண்டுகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் செய்யக்கூடாது என சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

2002 ஆம் ஆண்டு மீண்டும் தொகுதி வரையறை போதும் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, 25 ஆண்டுகளுக்கு நீடிக்கப் பட்டது.

தற்போது பா.ஜ., மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்ய திட்டமிட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் செய்தால் இந்தி பேசும் மாநிலங்களில் எம்.பி., தொகுதிகள் அதிகரித்து விடும்.



தமிழகம் உள்பட தென் மாநிலங்களில் தொகுதிகள் குறைந்துவிடும். உத்திரபிரதேசத்தில், 80 தொகுதிகள், 143 தொகுதிகளாகவும், பீகாரில், 40 தொகுதிகள், 79 ஆகவும், மத்திய பிரதேசத்தில், 29 தொகுதிகள், 52 ஆகவும் உயர்ந்து விடும். தமிழ்நாட்டில், 39 தொகுதிகள், 31 ஆக குறைந்துவிடும்.

இதனால், இந்தி பேசும், 10 மாநிலங்களில் மட்டுமே ஓட்டு வங்கி பா.ஜ., அரசு எளிதில் மத்தியில் ஆட்சி அமைத்துவிடும். இந்தி பேசாத மாநிலங்களை மாற்றாந்தான் மனப்பான்மையோடு நடத்தும் பா.ஜ., தொகுதி மறுவரையறை செய்தால், தென்னிந்திய மாநிலங்களை முற்றிலும் புறக்கணித்து விடும்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்தால் பெரிதும் பாதிக்கப்படும். பட்ஜெட் நிதி, திட்டங்களுக்கான நிதி, சிறப்பு திட்டங்கள் நிறுத்தப்படும். மாநில உரிமையை மீட்க தமிழக முதல்வர் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டியுள்ளார். மாநில உரிமையை மீட்க, பாதுகாக்க தி.மு.க., அரசு மக்கள் தொகை அடிப்டையிலான தொகுதி மறுவரையை எதிர்க்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.



சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் நகரைச் சேர்ந்த ரமேஷ் என்பவர், தனது மனைவியின் சிறுநீரக கோளாறு சிகிச்சைக்காக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் உதவி கேட்டார் . இதனையடுத்து கழக இளைஞரணி அறக்கட்டளை சார்பாக காசோலையை, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் பயனாளியிடம் வழங்கினார். உடன் கெங்கவல்லி பேரூர் செயலாளர் பாலமுருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தர்மபுரி கிழக்கு மாவட்ட இலக்கிய அணியின் சார்பாக பாலக்கோடு கிழக்கு ஒன்றியத்தில் செல்லியம்பட்டி ஊராட்சியில் உள்ள மறுவாழ்வு இல்லத்தில் உள்ளவர்களுக்கு கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பொன்.மகேஸ்வரன் ஏற்பாட்டில் இனிப்பு,அசைவ உணவு, போர்வை ஆகியவற்றை தர்மபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் பி.தர்மசெல்வன் வழங்கினார்.தொடர்ந்து அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.இந்நிகழ்ச்சியில் பாலக்கோடு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.கருணாநிதி, மாநில நிர்வாகி ஆர்.பி. செந்தில்குமார்,மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி,சோலைமணி வேலுமணி,உமா சங்கர்,மகளிர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி,இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஆர்.சி.செல்வராஜ்,முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.ஆர்.சேட்டு,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.